1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பன்றிகள், மாடுகள் இவைகளைப் போன்றவைகளை மாநகராட்சிகள், நகராட்சிகள் எல்லாம் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், சட்டத்தை மட்டுமே முழுவதும் நடைமுறைப்படுத்தி, அவைகளைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அம்மையார் அவர்கள் நன்றாக அறிவார்கள். இவைகளை வளர்ப்பதால் பல குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. முறையாக வளர்ப்பதற்கான முறைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, முறையாகத்தான் அதைச் செயல்படுத்த வேண்டுமே தவிர, தடுத்தால் பிரச்சினை வரும். பிறகு, அம்மையார் அவர்களே, இந்தந்தக் குடும்பங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும், என்ன செய்வது என்றும் கேட்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே நாம் இதன் மூலமாக வலியுறுத்தித்தான் படிப்படியாகச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-50 மணி

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பன்றி வளர்ப்பவர்களுடைய சௌகரியத்திற்காக ஊருக்கு வெளியே தனியாக இடங்களை ஒதுக்கி, பட்டிகள் அமைத்து இந்த இடங்களில்தான் பன்றிகள் அடைக்கப்படுமென்று ஓர் அறிவிப்பு தந்து, அந்த அடிப்படையில் அரசு பாதுகாப்பு தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடுகள் வளர்ப்பது குறித்து இதுபோல செய்யலாமா என்ற பரிசீலனை உள்ளது. இப்படித் திட்டங்கள் வந்தால் பொதுமக்கள் எந்த அளவிற்கு அதற்கு ஆதரவு அளிப்பார்கள் என்பதையும் அறிய வேண்டிய காலக் கட்டம் இருப்பதால் இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 7887 திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கண்ணங்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த உஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) அந்தப் பணிகள் எப்பொழுது துவங்கப்படும்’

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த உஞ்சனை மற்றும் 20 குடியிருப்புகள் சேர்ந்த ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக, நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீடு, தொழில்நுட்ப குழுவின் அங்கீகாரம் பெறும் பொருட்டு ஆய்வில் உள்ளது.

(ஆ) இக்கூட்டுக் குடிநீர்த் திட்ட மதிப்பீடு தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டு, பின்னர் வாரியத்தின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, இந்த ஆண்டு (1990–91) செயலுக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உஞ்சனை என்ற ஊரிலே இரண்டு கிணறுகளும் அமைக்கப்பட்டு 3 ஆண்டுகளாகி விட்டன. இந்தத் திட்டத்தை உடனடியாக ஏற்படுத்தித் தந்தால் அந்தப் பகுதியிலே இருக்கிற குடி தண்ணீர் பஞ்சம் நீங்கும். ஆகவே, அரசு உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு உத்தேச மதிப்பீடாக ரூபாய் 40 லட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, 1990–91–ல் மட்டும் இந்தத் திட்டத்திற்காக 10 லட்சம் ரூபாய் குடி நீர் வாரியத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டே பணிகள் விரைவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே, பட்டாளம், தொந்தி, நம்புதாலை, நுள்ளிமனை, காரங்காடு, புதுப்பட்டினம் ஆகிய பஞ்சாயத்துக்களில் கடுமையான குடிதண்ணீர் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் கேட்கும் போது அங்கே போதுமான ஊழியர்கள் இல்லை. முழு நேரமும் அந்த மோட்டார் பம்புகளை இயக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள். அந்தக் குறைகளை அரசு நிவர்த்தி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் பம்புகள் போன்றவற்றை எல்லாம் பராமரிக்கும் பணி அந்தந்த ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் செய்யப்படுகிறது.

1990 ஆகஸ்டு 22]

கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருக்குமானால், அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை குடிநீர் வடிகால் வாரியம் செய்து வருகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆட்கள் இல்லை என்ற குறை ஏதும் இல்லை. அப்படி ஏதாவது குறிப்பாக இருக்குமானால், அதை மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவாரானால் உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு சிறப்புத் திட்டம்.

* 1535 திரு. எஸ். எஸ். கருப்பசாமி :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர்களையும் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக ஆக்கி, அவர்களுக்கு நிரந்தரப் பணி, பணிப் பாதுகாப்பு, குறைந்த பட்ச மாத ஊதியம் போனஸ், வருங்கால வைப்பு நிதி ஆகியவை உறுதி செய்யும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா!

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது கைத்தறிகளை கூட்டுறவுமயமாக்கினால், நூல் வழங்குதல், தள்ளுபடி வழங்குதல், நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி, உற்பத்திக்கு ஏற்ப கூலியின் அடிப்படையில் போனஸ் வழங்குதல் ஆகிய திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அது தவிர, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அறிவித்துள்ளதுபோல நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 3,000 வழங்கப்பட்டது. அது 10 ஆயிரம் ரூபாயாக இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அது போல ஓடு போட்ட வீடுகளுக்குப் பதிலாக கான்கிரீட்—ஆல் அமைக்கப்படும் திட்டத்தின்கீழ் 2 ஆயிரம் வீடுகள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உருவாக இருக்கிறது. தனியாக, புதிய நவீன ரகங்களை உற்பத்தி செய்கின்ற நெசவாளர்களுக்கு பழுதடைந்த தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேற்படி சிறப்புத் திட்டங்கள் எல்லாம் தற்போது நடைமுறையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயுள்ள தனியார் நெசவு ஆலைகளில் வேலை செய்யும் நெசவாளர்கள் பெறுவது போல தமிழகத்திலே இயங்கும் தொழிலியல் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில்